# மேல் நாற்பதும் கீழ் நாற்பதும்

திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர்,
திருச்சி மாவட்டம் 620 101.

இரா. இளங்குமரன்

# மேல் நாற்பது

[உலகுக்கு வாழ்பவர், மேலோர்;
இவர்களைப் பற்றிய வெண்பாக்கள்
நாற்பது கொண்டது இது.]

இரா. இளங்குமரன்

# மேல் நாற்பது

## தமிழ்த்தாய் வணக்கம்

உலகுக்கு வாழ்வோர் உயர்மேலோர் அன்னார்
நலமிக்க வாழ்வை நவில—இலகொளியால்
எண்டிசையும் ஏத்த எழுந்தருள் ஞாயிறாம்
தண்டமிழ்த் தாயே துணை.

## நூல்

எப்பக்கம் தின்றாலும் இன்பூஞ் சுவைக்கட்டி
அப்பக்கம் வல்லாமும் தித்திக்கும்—ஒப்பில்லா
மேன்மக்கள் வாழ்க்கையின் எக்கூறும் மேதகைத்தாம்
தேன்சிக்கிற் றென்றே தெரி. 1

குன்றத்தின் முன்னர்க் குறுகிப் பிடர்கடுக்க
நின்றக்கால் தத்தம் நிலையறிவார்—என்றும்
இயல்மிக்க சான்றோர் எதிர்நிற்கும் ஏனோர்
இயல்பை விளக்கும் இது. 2

நில்லாமல் சுற்றும் நிலைபெற்ற இவ்வுலகம்
செல்லாமல் தோன்றும் செறிவுபோல்—வல்லாங்(கு)
உலகுக் குயிர்வாழும் ஒள்ளியோர் உள்ளம்
அலைந்தும் அலையா தறி. 3

குன்றம் நடுங்கக் குகையெல்லாம் துண்ணென்ன
நின்ற பகையின் நிலையொடுங்க—மன்ற
முழங்கும் அரிக்கச்சம் மூளாமை போல
உழங்கா துரவோர் உளம். 4

கீழாகத் தாழ்த்திக் கிடையாக வைத்தாலும்
ஊழால் உயரும் ஒளிச்சுடர்—சூழாத்

துயரங்கள் சூழ்ந்து துவண்டார் எனினும்
உயர்ந்தோர்தம் உள்ளம் உயர்வு. 5

கண்ணுள் ஒளிசென்றால் காட்சிப் பொருளாகும்;
புண்ணுள் புகுந்தால் பொலிவாமோ?—எண்ணும்
பெரியோர் உளத்தில் பெருகியபே ரன்பு
வருமோ அயலார் வழி? 6

நீரோடும் போக்கில் நெளிந்து மிதப்போடும்
ஏரோடும் மீனோ எதிர்த்தோடும்—நேரோடும்
வாழ்வியலை முற்றாய்ந்த வள்ளியோர் என்றென்றும்
தாழ்வறச் செய்வார் தனித்து. 7

நெட்டுறக்க வெள்ளத்துள் நீளுலகம் சூழ்ந்தாலும்
பட்டுறக்கம் கொள்ளான் பரிதியோன்—திட்டமிட்டு
வையத்தார் நன்மைக்கே வாழும் பெருமக்கள்
பையக்கண் துஞ்சார் பரிந்து. 8

நன்றாய்த் துணிகிழிந்தும் நாடும் உயர்தொண்டால்
ஒன்றாய்ப் பிணைத்திடும் ஊசிநூல்—என்றும்
இயல்பால் பிரிந்தோரை ஈரத்தால் சேர்க்க
முயல்வார் பெரியர் முனைந்து. 9

பன்னூறு கூறாய்ப் பகுத்தாலும் வெண்ணீர்தான்
ஒன்றாகச் சேரின் உருவொக்கும்—நன்றாய்ந்த
மேலோர் பிரிந்தாலும் மீண்டும் இணையுங்கால்
மேலோராய் நிற்பார் மிடைந்து. 10

கப்பிய வெப்பத்தால் காய்ந்து முதிர் எட்காய்
ஒப்பும் இருகூறாய் நேர்பிளக்கும்—எப்பாலும்
சாயாமல் நேர்மை சரியாமல் மன்றுநெறி
மாயாமல் சொல்வாரே மன். 11

பூஞ்சோலை தன்னருகில் போந்தார் தமக்கெல்லாம்
வாஞ்சையால் இன்ப வளமூட்டும்—தீஞ்சொல்லும்
சீரமைந்த தொண்டும் செறிந்த பெருமக்கள்
பேரருள் செய்வார் பிறர்க்கு. 12

எவ்வோர் உறுப்புக் கிடுக்கண் இயைந்தாலும்
செவ்வே கசியும் செறிவிழிகள் — அவ்வா(று)
உலகத் துயிர்க்கெல்லாம் உள்ளுருகி ஓம்பல்
இலகும் பெரியர் இயல்பு. 13

ஒற்றைத் திரிவிளக்(கு) ஓரா யிரம்விளக்குப்
பற்றி ஒளிரப் பணிசெய்யும்—கற்றுத்
துறைபோய மேலோர் தொடுத்தவர்க் கெல்லாம்
கறைபோகச் செய்வார் கனிந்து. 14

பட்ட உணர்வால் பனிச்சென் றிலைகூம்பும்
தொட்டாற் சுருங்கிச் செடிபோலக்—கிட்ட
நெருங்குமுன் தீய நெறியாயின் கூம்பும்
அரும்பொருள் ஆய்ந்தோர் அகம். 15

ஒட்டும் எரியால் உடன்பற்றி மேலோங்கிச்
சுட்டும் ஒளியாகும் சூடந்தான்—பட்ட
அளவில் அறிவறிந் தாராய்ந்து கொள்ளல்
தெளிவில் சிறந்தோர் திறம். 16

தோன்றா எழுவாய்போல் தோன்றும் படகோட்டி
தோன்றாமல் தோன்றும் பிறைநிலவு—சான்றோர்கள்
உண்மை அறிவினால் ஒட்பம் மிகவெய்தித்
திண்மை உறுவார் தெளி. 17

நீர்பருகிப் புல்தின்று நேயமிகு பால்சொரியும்
சீர்பெருகும் ஆவின் செயல்போல—நேர்பெருகும்
வாழ்வியலை நன்காய்ந்தோர் வையம் சிறந்தோங்கச்
சூழ்வனவே சொல்வார் தெளிந்து. 18

நுண்ணிய நூலேனும் நூற்றுக் கணக்காக
அண்ணினால் மானப்பேர் ஆடையாம் —எண்ணிய
சிற்றளவே ஆயினும் செய்யின் தவறாமல்
உற்றதொன் றுண்டாமோ ஒப்பு? 19

வேரில் படிநீரும் வேண்டும் வளத்துரமும்
சீரில் பரவும் செடிக்கெல்லாம்—நேரில்

பெருமக்கள் பெற்றுள்ள பேறுகள் யாவும்
வருமக்கட் கெல்லாம் வரும். 20

தண்டா நறுமணத்தைத் தண்ணீர்க்குத் தான்தந்து
விண்டேத்தும் பேறெய்தும் வெட்டிவேர்—தொண்டே
குறியாகக் கொண்ட குடியாண்மை மிக்கோர்
செறிவாகச் செய்வார் செயல். 21

கால்பட்டுக் கைபட்டுக் கட்டளையின் வாய்பட்டு
மால்பட்ட மண்ணேதீச் சூளையின்—மேல்பட்டுச்
செங்கலெனும் பேரெய்தும்; சீர்த்திமிகு சால்பாளர்
தங்களியல்(பு) இன்னவே தாம். 22

சிற்றெலியை ஓட்டச் செருபடைகள் வேண்டாஓர்
வற்றலாம் பூனை வரிற்போதும்—பெற்றசீர்
வல்லாண்மை யாளர் வருவதைக் கண்டாலே
புல்லாண்மை ஓடும் புடைத்து. 23

கூர்த்துக் குரைத்தாலும் கோலக் குளிர்மதியம்
வேர்த்து வெதும்பி வெடிக்காது—சீர்த்த
பொறையில்லார் புன்சொல் புகன்றாலும் மேலோர்
நிறைமல்கி நிற்பார் நிலத்து. 24

புல்வாய் மறந்தும் புலாலுண்ண மாட்டாதால்
பொல்லா வறுமையில் போய்ப்பட்டு—நல்லோர்
அழுங்கிக் கிடந்தாலும் அஃதொழிக்க வேண்டிப்
புழுங்கும் வினைசெய்யார் போய். 25

ஆழத்தில் தோண்டி அலைத்தாலும் வல்லறுகு
சூழத் தளிர்த்தோங்கும் சுற்றமுடன் - வாழும்
தகைமிக்க மேலோர் தமையழித்த போதும்
வகைமிக்கு வாழ்வார் வளர்ந்து. 26

நெருப்பைக் கறையான் அரிக்குமோ? வாய்த்த
இரும்பை எலிகொறித்த லுண்டோ? — பெருந்தோற்றக்
குன்றன்ன கொள்கைக் குணத்தோரைக் கீழ்மக்கள்
சென்றென்ன செய்வார் துயர்? 27

வேம்பு நலிந்தாலும் வெந்நோய் பலபோக்கும்;
கூம்பு குலைந்தும் குணமாக்கும் — தேம்பி
அயர்ந்தாரே ஆயினும் அன்புடையார் என்றும்
உயர்ந்தனவே செய்வார் உவந்து. 28

அள்ளி நறுக்கி அவித்துக் கடைந்தாலும்
கொள்ளும் சுவையில் குறையாமல் — உள்ளும்
நலம்பயக்கும் கீரைபோல் நல்லனவே செய்தல்
குலம்பயக்கும் சான்றோர் குணம். 29

தீச்சூடு கண்டும் திருவிளக் கேற்றிநற்
பூப்போட்டு வாழ்த்தும் புகழ்போல — நாப்பட்ட
வாறெல்லாம் கூறி வதைத்தாலும் நல்லோர்தம்
பேறென்று கொள்வார் பெரிது. 30

தொட்டார் எவரேனும் தூய நறுஞ்சாந்தம்
பட்டுத் திளைத்துப் பரிவுறுவார் — எட்ட
இருந்தாலும் எங்கும் இசைபரப்பும் சான்றோர்
பெருங்காதல் நட்பினைப் பேண். 31

ஓங்கருவிச் சூழற்கண் ஒன்றினோர் ஒண்தூவல்
வாங்கிய இன்பில் வயங்குவார் — தேங்கிய
பண்புப் பெருமக்கள் பக்கல் இயைவோரும்
பண்பெற் றுயர்வார் பரந்து. 32

நீராழம் நோக்காமல் நேய முறத்தேடிச்
சீராய்ந்து கொள்வர் செழுமுத்தம் — நேரார்க்கும்
ஏரார்ந்த நன்மக்கள் எங்கே இருந்தாலும்
ஆராய்ந்து கொள்வார் அறி. 33

தும்பி குழலாக வண்டிசை யாழாக
நம்பு கலைவல்லார் நாடுவர் — பம்பும்
பெரியோரின் வாழ்வுப் பெரும்பேற்றைக் கொள்ள
உரியோரே கொள்வார் உவந்து. 34

காரிருள் கப்பும் கருவறைக்குள் பொற்சிலையைச்
சீரிசை பாடிச் சிறப்பிப்பார் - நேரிய

மாண்பாளர் நாட்டில் மறைவாக வாழ்ந்தாலும்
காண்பார் கருத்துடையார் காண. 35

பூங்கொடியில் தோன்றிப் பொலிவாய பொன்மலர்
ஏங்காமல் வீழும் எழில்போல—ஓங்கிய
உண்மை உணர்வாளர் உள்ளம் மறுகாமல்
மண்ணில் அமைவார் மகிழ்ந்து. 36

வம்பு செறிந்து வளப்பை மறைத்தாலும்
நம்பு கதிரெழும்ப நைந்தோடும்—வன்பு
செறிந்தோர் பலராகச் சேர்ந்தாலும் மாண்பு
நிறைந்தோர்முன் நிற்பரோ நேர்? 37

ஆன்ற மணமும் அருந்தெய்வப் பெற்றிமையும்
தோன்றும் பொழுதே துளவெய்தும்—சான்றோர்
பிறப்பொடு வாழ்வுப் பெருநிலைகள் எல்லாம்
சிறப்பொடு சேரும் செறிந்து. 38

ஏழை குடிசையிலும் ஏழடுக்கு மாடியிலும்
வாழும் மணம்பரப்பும் வண்முல்லை—தோழகேள்!
எங்குப் பிறந்தாலும் ஏற்றம் மிகவுடையோர்
தங்கள் தகைமை தனி. 39

சூழா தெடுத்தெறிந்தும் சூழ்ந்த இடமெல்லாம்
தாழா மணம்பரப்பும் தாழம்பூ—தோழா!
இசைமிக்க மேலோர் இறந்தாலும் ஞாலத்(து)
அசைவற்று வாழ்வார் அறி. 40

---

அருஞ்சொற் பொருள்:

10. வெண்ணீர் - பாதரசம், 25. புல்வாய் - மான், கூம்பு - கப்பற் பாய்மரம், 37. வம்பு-மூடுபனி, 38. துளவு - துளசி.

# கீழ் நாற்பது

[தன்னலமே குறியாக வாழ்பவர் கீழோர்;
இவர்களைப் பற்றிய வெண்பாக்கள்
நாற்பது கொண்டது இது.]

இரா இளங்குமரன்

# கீழ் நாற்பது

## தமிழ்த்தாய் வணக்கம்

தந்நலமே நாடும் தகைமையர் கீழ்களாம்
அன்னவர் தன்மை அறைதற்கு — மன்னிய
இன்னமுத ஊற்றாய் இலங்கு தமிழன்னை
பொன்னடிப் போதே புகல்.

## நூல்

பொற்குப்பி பூண்டு பொலிபவழச் செங்குடைக்கீழ்
நிற்கின்ற இண்டின் நிலையென்ன? — பொற்பென்ன?
உள்ளே செறிந்துள்ள முள்ளென்ன? புல்லியரின்
உள்ளும் புறம்பும் உணர். 1

நீர்கடந்து நீண்ட நிலங்கடந்து நேர்கிடந்த
ஊர்கடந்து பண்ணோ டுவந்தேகிச் — சீர்கிடந்த
தண்டேன் நுகரீக்கும் தாழ்ந்த நுகரீக்கும்
கொண்டாடும் ஒப்புண்டோ கூறு? 2

மன்னும் உருவத்தால் மக்களென நின்றாலும்
உன்னும் உணர்வாலோர் ஒப்பாகார் — துன்னும்
பலவோடு தட்டுப் பலவை அறிந்தால்
இலகும் துணிவாய் இது. 3

நல்லரிசி வித்துப்போல் நாயுருவி காய்த்தாலும்
புல்லரிசிக் கேனும் பொருந்துமோ? — சொல்லிய
தோற்றத்தைக் கண்டு துணியாமல் கீழ்களின்
தேற்றத்தைக் கண்டே தெளி. 4

கற்படியின் உச்சிமேற் கால்வைத்து நின்றோங்கு
பொற்சிலையை வாழ்த்தியுளம் பூரிப்பர் — தற்சிறப்பின்

நன்மையாற் கொள்மேலோன் நற்புகழைக் கீழ்மகன்
புன்மையாற் கொள்வனோ போய்? 5

விண்ணிற் பறந்தாலும் வெள்ளைப் புறாவாக
எண்ணப் பெறுமோ இலைசருகு?—நண்ணும்
சிறியவர் செம்மாந்து செல்வதால் என்றும்
செறிவரோ நல்லோர் சிறப்பு? 6

கோட்டை சரிந்தும் குடியிருப்புப் பன்னூறாம்!
ஈட்டு சிறுபுற்றால் என்பயனாம்?—வாட்டும்
நலிவகத்தும் மேலோர் நலமாண்பைக் கீழோர்
பொலிவகத்தும் செய்யார் புரிந்து. 7

வாடை வசையேற்க வண்டமிழ்த் தென்றலோ
கூடி வரவேற்கக் கோலோச்சும்—நீடு
செயலாலே அன்றிச் சிறப்பாகக் கொள்ளும்
இயல்பாவ தென்னே இயம்பு? 8

வீட்டோ டிருந்தும் பெருச்சாளி கேடாக்கும்;
காட்டோடிருந்தும் கலைவனப்பாம்;—கூட்டோடு
சேர்ந்திருந்த போதும் சிறியர் நலத்தோடு
நேர்ந்திருக்க மாட்டார் நிலைத்து. 9

வெள்வரிக் காய்பழுத்தால் விம்மி வெடிப்பாகும்;
உள்ளுசுவை மாங்கனியோ உள்சுருங்கும்;—உள்ளம்
சிறியர் பெரியர்தம் சீர்மையைக் காட்டும்
குறியாக நெஞ்சிற் குறி. 10

மெத்தென்று தட்டவும் மேலில்லா மட்பாண்டம்
சொத்தென்று கீறலைச் சொல்லிவிடும்—ஒத்தறியாச்
சிற்றினம் உற்ற சிறுதன்மை வாய்திறக்கப்
பெற்றதும் காட்டும் பெரிது. 11

இளநீருக் கொப்பாய இன்னீர் உடலோ(டு)
அளவவும் உப்பாக மாறும்—உளமாரப்
பொய்யாளர் கூட்டைப் பொருந்தினோர் சோராத
மெய்யாளர் என்னல் மிகை. 12

நெல்லுக் குரமுட்டி நீர்விட்டுப் போற்றுவோர்
புல்லைப் பிடுங்கிப் புறத்திடுவர்—நல்ல
பெரியோரைப் போற்றிப் பெரிதுவப்பார் கொல்லற்
குரியோரைக் கொல்வார் உருத்து. 13

உள்ளி உரித்துரித் துள்ளே அறிந்தாலும்
கொள்ளும் பொருளிருக்கக் கூடுமோ?—எள்ளும்
இழிந்தாரை எண்ணி இளைத்தாலும் நன்மை
வழிந்தோட உண்டோ வகை? 14

பார்க்கும் பொழுதே பலவண்ணம் காட்டித்தன்
வேர்ப்பை வெளிப்படுத்தும் பச்சோந்தி—போர்த்த
உருவத்தால் சொல்லால் ஒழுக்கத்தால் மாறித்
தெரிவிக்கும் கீழ்கள் தெரி. 15

வல்லிரும் பென்றாலும் மண்ணுள் புதையுண்டால்
புல்லும் துருவால் பொடியாகும்—பல்வகையான்
வல்லவரே ஆனாலும் வன்கொடுமைக் கீழுடன்
புல்லுவரேல் போகும் புகழ். 16

இன்சுவைப் பாலை எளிதில் உறைமாற்றும்
பொன்னுடலை மாற்றும் புகுநோய்கள்—அன்புடையாய்!
பொல்லாத சூழ்ச்சியால், பொன்றாத கீழ்களோ
நல்லாரை மாற்றும் நலித்து. 17

பட்டுக் கிழிக்கும் பருமுள்ளுக் கெந்நாளும்
பட்டும் பருத்தியும் ஒப்பேயாம்—ஒட்டிக்
கெடுப்பார்க்குக் கீழென்றும் மேலென்றும் இல்லை;
அடுப்பார்க்குத் தாழா தகல். 18

நீடிய வாழ்வு நெறியாகத் தந்தாலும்
கோடரிக் காம்பு குலங்கெடுக்கும்—கூடிய
வாழ்வாரை அன்றித்தம் வாழ்வுத் துணையான
கீழ்களைச் சாய்ப்பதும் கீழ். 19

பன்றிக் கெழிலூட்டிப் பல்லக்கில் கொண்டேந்திச்
சென்றக்கால் சேறுற்றால் என்னாகும்?—துன்றும்

விருப்போடு பாய்ந்து விரைந்தோடிக் கீழோர்
இருப்போடு காட்டும் இனிது! 20

ஆட்டாமல் தானேதான் ஆகாதால் எள்ளெண்ணெய்
வாட்டாமல் வாராதால் சூட்டணிகள் — நீட்டிய
அல்லற் படுத்தற் கமைந்தொழுகல் ஒன்றேதான்
புல்லர்க் கியல்பாய பூண். 21

சிலம்பி விரிவலைக்குள் சிக்கி, அது தாக்கப்
புலம்பி நலிந்தொழியும் புல்லீ — அலம்பிக்
குறை செய்தல் கொள்கையாக் கொண்டோர் தாம் சிக்கிச்
சிறைசெய்யச் சீரழிவார் சேர்ந்து. 22

கல்லால் அடித்துக் கலைத்தவன் அன்றியுள
எல்லார்க்கும் தேனீ இனலூட்டும் — பொல்லாங்கைப்
பேரோடு பேணும் பெருங்கீழ் சினங்கொண்டால்
ஊரோடு தாக்கும் உருத்து; 23

தீத்தேள் மறைந்து தெரியாமற் போனாலும்
ஆர்த்ததைச் சாவ அடிப்பரால் — மூத்த
கொடியார் கொடுமை குறியா திருந்தும்
படுவார் கொடுமைப் பயன். 24

தலையற்றுத் துள்ளத் தவச்சிறு போழ்தே
நிலைபெற்றும் ஆட்டின்பம் நீளும் — மலைபெற்ற
வாழ்வாக எண்ணி வளரா மனம்செருக்கிக்
கீழ்வான வில்லாகும் கீழ். 25

காற்றிற் பறத்திக் களநெல்லைத் தூற்றினால்
ஆற்றப் பதரோ அடித்தோடும் — ஏற்றவோர்
உள்ளாற்றல் இல்லார்க் கொளியில்லை; காலமாம்
வெள்ளாற்றிற் போவார் விரைந்து. 26

காலைக்குள் தோன்றிக் கடிதாய் மிகவளர்ந்து
மாலைக்குள் காளான் மடிந்தொழியும் — ஞாலத்துள்
புல்லியர் வாழ்வு புரிதற்குக் காட்டிய
நல்லதோர் சான்றாக நாடு. 27

பற்றாத தீயாய்ப் பசியெடுக்கக் காட்டகத்துக்
கற்றாழஞ் சோறு கவைக்காமோ?—வற்றாத
செல்வத்தில் புல்லர் செழித்தாலும் சேர்ந்தார்க்கச்
செல்வத்தால் நன்குளதோ செப்பு? 28

செல்வப் பொழுதில் செறிவாகிச் சேர்ந்துவரும்
அல்லற் பொழுதில் துணையாகார் — வல்ல
உயிரச்சம் உற்றக்கால் ஓடும் துணையும்
கயிற்றுந்த பட்டமும் காண். 29

காண்பாரை அல்லாமல் காணும் பொருள்களையும்
பூண்போட்டுப் போர்த்துமால் புல்லிருள் — மாண்பற்ற
நெஞ்சத்தர் வஞ்சத்தர் எஞ்சாத நஞ்சத்தர்
நெஞ்சமும் நீளிருளும் நேர். 30

ஓடாமல் தேங்கி உறையுநீர் மூக்கடைக்கும்
கேடான சேறாய்க் கெடுத்தொழிக்கும்—வாடாத
செல்வம் பலரிடத்தும் சேறா தகப்படுத்தல்
கொல்லும் கொடுமையெனக் கொள். 31

ஓங்கும் எரியால் உலைமூடி தானோடி
வீங்கிய சோறும் வெளியேறும்—யாங்கும்
மனத்துணர்ச்சி வாய்ப்பட்டோர் வாடாத செய்கை
இனத்தோடு மாய்க்கும் எளிது. 32

பண்ணும் பரிசால் பதனீரும் கள்தெளிவும்
எண்ணும் பனையில் எளிதெய்தும்— நண்ணும்
பிறப்பில் பிறழ்வில்லை; பெட்டொழுகு சேர்க்கைத்
திறக்கொடுமை என்றே தெளி. 33

மண்ணின்மேல் நிற்கும் மரமென்றால் மற்றதனுள்
எண்ணற்ற வேர்கள் இழைந்தோடும்—கண்ணற்ற
கேடு புரிகின்ற கீழ்நெஞ்சின் ஆழத்துள்
நீடும் நெடுவேர் நிலைத்து. 34

வெண்'மை' கருத்தால் விரும்பும் நலமூட்டும்;
உண்மை கருத்தால் உறுதுயராம்—வண்மை

உடையார்க் கியாரே உறவாகார்? தீய
படையார்க் கியாரே பரிவு? 35

செய்தக்க போழ்தின்கண் செய்தலே சால்பாகும்;
செய்தக்க தல்லாக்கால் செய்தென்ன? — மெய்யாய்ப்
பயிர்கெட்ட பாழ்நாள் படுமழை ஒப்பாம்
உயிர்கெட்ட பாழ்நாள் உணவு? 36

பூக்கடையைப் பாழாக்கிப் புன்னாற்றம் போய்நெளியும்
சாய்க்கடையை உண்டாக்கும் 'சால்'பாகும் —
தேக்கெறியும்
செஞ்சொல்லை நீக்கிச் செவிகைக்க நாநாறத்
தஞ்சொல்லைச் சொல்வார் தரம். 37

உண்ட பொருள்கள் உருமாற்றம் எய்தாமல்
அண்டி வெளியேறின் ஆவதென்? — வண்டி
அளவாகக் கற்றாலும் ஆய்ந்துணராப் போழ்தில்
உளதாம் பயனோ உரை? 38

கீழ்கிடக்கும் குப்பைகள் மேலே கிளர்ந்தேகின்,
வாழ்பறவை கூட்டுள் வதிவாகும் — சூழ்ந்துள்ள
காலத் தியல்பைக் கருத்தாய் உணர்ந்தோரே
சால அடங்குதல் சால்பு, 39

சோறாக்கும் தீயேபோய்க் கட்டெரித்து மாறாத
ஊறாக்கும் என்றார் ஒழிக்கின்றார் — வேறாக்கும்
தீதை வெறுப்பரே அல்லாமல் தீயரின்
காதை அறுப்பரோ கண்டு? 40

---

அருஞ்சொற் பொருள் :

3. பலவு - பலா; தட்டுப்பலவு - கடுமையாய் அரிக்கும் செடி, 28. கவைக்காமோ - பயன்படுமோ? 35. வெண்மை - வெண்ணிற முகில்.

கிடைக்குமிடம் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

தலைமை நிலையம் :

154, டி. டி. கே. சாலை,
ஆள்வார்பேட்டை, சென்னை-18.

கிளை நிலையங்கள் :

79, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை-108.

திருநெல்வேலி-6 மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1.
திருச்சிராப்பள்ளி-2. சேலம்-1.

விலை உருபா 1-50

அப்பர் அச்சகம், சென்னை-108.